ஸ்ரீ நவ துர்க்கா



பகவத் சேவை பூஜையுடன்



"நஜன்"

பிரதிபா பிரசுரம்

பிரதிபா பிரசுரம்

சமீபத்தில் வெளிவந்த புத்தகங்கள்

மந்தர ஜப கல்ப மஞ்சரி

இந்த மந்தர கல்ப மஞ்சரி பிரதிபாவின்
98வது புத்தகமாக வெறிவந்துள்ளது.
இதில் 130 மந்தரங்கள் அடங்கியுள்ளது.
அஷ்ட ஐஸ்வர்யம் உண்டாக குபேர மந்தரமும்,
வியாதி குணமாக தன்வந்திரி மந்தரமும்,
கெட்டுப்போன (திருடு) பொருள்கள் கிடைக்க
கார்த்த விர்யாஜுன மந்தரமும், யமபயம் நீங்க
ம்ரத்யுஞ்ஜய மந்தரமும், கல்வியில் தேர்ச்சி பெற
ஹயக்ரீவ மந்தரமும் அடங்கியுள்ளது.

ஸ்ரீ வித்யா (லகு பூஜை)

ஸ்ரீ தேவி நவாவரண லகு பூஜை
தேவி கட்கமாலா ஸ்தோத்திரம்
லலிதா சகஸ்ரநாமம்
லலிதா திரிசதி ஸ்தோத்திரம்
ஸுப்ரமண்ட அஷ்டோத்திரம்
பாவனோபநிஷத் மற்றும் பவானி சகஸ்ரநாமம்
அடங்கியுள்ளது.

விவரங்களுக்கு

பிரதிபா பிரசுரம்

'லலிதாலயா'
95/1, ஆடம் தெரு, மயிலாப்பூர்,
சென்னை - 600 004. போன்: 99413 82852

ஸ்ரீ நவ துர்க்கா

(பகவத் சேவை பூஜை, துர்க்கா
பூஜாவிதானம், துர்க்கா திரிசதி, துர்க்கா தகார
ஸஹஸ்ரநாமம் கொண்டது)

ஆசிரியர்:
ஸ்ரீ வித்யா ஞான பாஸ்கரா
டாக்டர் "நஜன்"
(எஸ். நடராஜன்)



பிரதிபா பிரசுரம்
தோற்றம் : : நவராத்திரி 1973.

பிரசுரித்தவர்:
என். லலிதாம்பாள்

பிரதிபா பிரசுரம்
பழைய எண்: 39/1, புதிய எண்: 95/1, ஆடம் தெரு,
மையிலாப்பூர், சென்னை - 600 004. போன் 2494 07 20.

(உரிமையுள்ளது) (விலை ரூ. 120/-

ஸ்ரீ நவ துர்க்கா
(SRI NAVA DURGA)
முதற் பதிப்பு : அக்டோபர் 1977,
மறு பதிப்புகள் : 1980, 1985, 1995,
ஐந்தாம் பதிப்பு : ஜுன் 2003.
ஆறாம் பதிப்பு 2023 ஜனவரி
விலை ரூ. 120/-

பிரதிபா பிரசுரம்
19

பொருளடக்கம்

1. நவ துர்க்கா
2. ஒன்பது எண்களில் அம்பிகை
3. ஒன்பது துர்க்கைகள், திருஷ்டி, துர்க்கை மூகாம்பிகை பற்றிய விவரங்கள்
4. நவராத்திரி பூஜை
5. நவ துர்க்கா ஜபம்
6. துர்க்கா பூஜா விதானம்
7. துர்க்கா திரிசதி, அஷ்டோத்திரம், துர்க்கா தகார ஸஹஸ்ரநாமம்

முடிவுரை

Typeset by **MADURAM LASER PRINT** - Chennai - 4.
Printed by **SREE MURUGAN OFFSET** - Chennai - 4.

காணிக்கை



"ஸ்ரீ நவ துர்க்கா"வை முதலில் வெளியிட்ட

சாக்கரத்னம்

ஸ்ரீ. வி. கோவிந்தராஜ பிள்ளை

அவர்களின் அருமை தந்தையும், தெய்வ மனமும்,

பரோபகாரமும் நிறைந்த காரியங்களைச் செய்து

அம்பிகையின் அருளைப் பெற்றவருமான

ஸ்ரீ வேங்கடேசம் பிள்ளை

அவர்களின் நினைவிற்கு இந்நூலை

காணிக்கையாக்குகிறோம்.

பிரதிபா பிரசுரத்தினர்.

ஸ்ரீமுகம்
காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் ஸ்ரீமடம், காஞ்சீபுரம்

முகாம் : சேலம்-7

தேதி : 26-09-1977

எங்கும் நிறைந்துள்ள பரம்பொருள் பலவித உருவ வடிவங்களில் காட்சி அளிக்கிறது. அவைகளுள் சக்தி வடிவமாக துர்க்கா, லக்ஷ்மி, சரஸ்வதி போன்ற வடிவங்களில் அம்பாள் அருள் பாலிக்கிறாள். துன்பத்தை நீக்குபவள் துர்க்கா. அவள் தேவதைகளுடைய துன்பத்தி லிருந்து மனிதர்களுடைய துன்பம் வரை நீக்குபவள்.

அந்த துர்க்கையின் பல அம்ச வரலாற்றை ஸ்ரீ நவ துர்க்கா என்ற பெயரில் ஸ்ரீ நடராஜன் "நஜன்" பிரதிபா பிரசுர மூலமாக நவராத்திரி சமயத்தில் வெளியிடுவதைக் கேட்டு சந்தோஷிக்கிறோம்.

இது போன்ற நல்ல நூல்களை எழுதி வெளியிட்டு அம்பாளின் அனுக்கிரஹத்திற்கு பாத்திரமாகும்படி ஆசீர்வதிக்கிறோம்

நாராயண ஸ்மிருதி

ஸ்ரீமத் சத்குரு சாந்தானந்த சுவாமிகள்
புவனேஸ்வரி அதிஷ்டானம்

முகாம் : சேலம்-14.

தேதி : 22-08-1977

நவ துர்க்காம் மஹா காளீம் பிரும்ஹ விஷ்ணு சிவாத்மிகாம் த்ரிகாலக் ஞான ஸம்பன்னாம் நமாமி புவனேஸ்வரீம்

பக்தர்களின் துயரங்களை அறவே துடைத்து அவர்களைக்காத்து ரக்ஷிப்பவள் அன்னை துர்க்கா தேவி ஒருவளே. துஷ்டர்களையும், பகைவர்களையும் அழித்து சிஷ்டர்களைக் காப்பதொன்றையே தொழிலாகக் கொண்டுள்ளவள் அன்னை ஸ்ரீ துர்க்கா தேவி.

ஸ்ரீ துர்க்கா தேவியின் பெருமைகளையும் மகிமைகளையும் விளக்கும் "ஸ்ரீ நவ துர்க்கா" ஸ்ரீ சாரதா நவராத்திரி காலத்துல் வெளிவருவது சக்தி உபாஸகர்களுக்கும் சாக்தர்களுக்கும் பரம சந்தோஷத்தை அளிக்கிறது. இப் பிரசுரத்தினர் ஸ்ரீ துர்க்கா மாதாவின் திருவருள் மேன் மேலும் பெருக வேண்டுமாய் ஸ்ரீமத் சத்குரு சாந்தானந்த சுவாமிகள் அனுக்கிரக்கின்றார்கள்.

அ. வே. தேவராஜ சர்மா.

முகவுரை

சாக்கரத்ன ஸ்ரீ. வி. கோவிந்தராஜப் பிள்ளை ஆச்சாள்புரம்



அம்பிகையின் பிரபாவத்தைப் பற்றி எங்கிருந்தெல்லாமோ தேடிக் கண்டு பிடித்து அருமையான ஆண்மீக புத்தகங்களை வெளியிட்டு வரும் பிரதிபா பிரசுரத்தினரும் அதன் ஆசிரியர் நஜனும் அடியேன் வெளியிட்ட ஸ்ரீ நவ துர்க்காவை பல அரிய விஷயங்களையும் சேர்த்து இந்த நவராத்திரியில் வெளியிட்டிருக்கிறார்கள்.

நஜன் பல மகான்களின் அருளாசியையும், அம்பிகையின் அனுக்கிரஹத்தையும் பூர்ணமாகப் பெற்றவர். அவர் "ஸ்ரீ நவ துர்க்கா" வை அவருடைய புஸ்தக வரிசையில் சேர்த்தது மிக பொருத்தமே.

1979-ல் என் அன்பர்கள் சிலருடன் கொல்லூர் சென்று மூகாம்பிகையைத் தரிசித்து புரச்சரனை ஜப ஹோமங்கள் மூன்று தினங்கள் நடத்தியதன் விளைவாக ஸ்ரீ நவதுர்க்கா என்ற நூலை வெளியிட்டு வழங்கினேன். இப்போது நவ துர்க்கையின் விளக்க உரை திருஷ்டி துர்க்கா மந்திரம், பகவத் சேவை முதலிய அரிய விஷயங்கள் சேர்க்கப்பட்டு மிக அருமையான தேவி நூலாக வெளி வந்துள்ளது.

திருவெண்காடு ஸ்ரீ முத்துஸ்வாமி சாஸ்திரிகள். ஆசாள்புரம் ஸ்ரீ தியாகேச குருக்கள் இருவரும் மந்திரப் பகுதியைத் தொகுத்து தந்திருக்கிறார்கள்.

இந்த தெய்வ காரியத்தில் யாருக்கு யார் நன்றி செலுத்துவது? இவர்கள் எல்லோரும் அம்பிகையின் பூரணமான அருட்கடாக்ஷத்தை பெற வேண்டும் என பிரார்த்திக்கிறேன்.

கமலா நிலையம் ஆச்சாள்புரம்.

வி. கோவிந்தராஜ பிள்ளை.

பதிப்பாசிரியர் நன்றி

நவராத்திரியில் சண்டி ஹோமத்தின் போது "ஸ்ரீ நவ துர்க்கா" என்ற எங்கள் 19-வது புத்தகத்தை வெளியிடுவதை கிடைத்ததற் கரிய பாக்கியமாக கருதினோம்.

19 எண்ணிலுள்ள 1 சிவத்தையும் 9 சக்தியையும் குறிக்கிறது. தேவி ஒன்பதுநாள் தவமிருந்து 10-வது நாள் இறைவனுடன் கலந்து சிவசக்தி ஐக்கிய ரூபிணியாகிறாள். அந்த பத்தாவது நாள் விஜயதசமி வெற்றித் திருநாள். நவராத்திரியில் நவ துர்க்கையை வழிபடுபவர்கள் அந்த சித் சக்தி ஐக்ய ஸ்வரூபிணியின் அருட்காக்ஷத்தைப் பெற உதவும் இந்த புத்தகம் 19 (1+9) ஆக அமைந்ததும் அருமையான பொருத்தமே தான்.

சாக்தரத்ன ஆசாள்புரம் ஸ்ரீ கோவிந்தராஜ பிள்ளை அவர்கள் எங்கள் தெய்வீகப் பணிக்கு ஒரு அரும்பெரும் புதையலாகக் கிடைத்தார்கள். இவர் இதுவரை தெரியாத பல அரும்பெரும் மந்திரங்களையும், சக்ரங்களையும் தேடிக் கண்டுபிடித்து கொடுத்து எங்களுக்கு உதவி வருகிறார்கள். ஒரு மாபெரும் ஸ்தாபனம் செய்ய வேண்டிய பணி இது. அதை அவர் செய்வதன் மூலம் இந்த ஹிந்து மதத்திற்கே அளவற்ற தொண்டு செய்தவராகிறார்.

அவர் ஏற்கனவே வெளியிட்டு இலவசமாக வழங்கிய "ஸ்ரீ நவ துர்க்கா"வை நஜன் அவர்களைக் கொண்டு விளக்கங்கள் எழுதச் சொல்லி இன்னும் அரிய விஷயங்களையும் சேர்த்து வெளியிட்டிருக்கிறோம். இதை எங்கள் பிரசுரமாக வெளியிட அனுமதி அளித்த ஸ்ரீ பிள்ளை அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். அவர் சீரும் சிறப்பும் பெற்று வாழ்ந்து எங்கள் தொண்டுக்கு என்றும் பக்கபலமாக இருக்க வேண்டும் என்று ஜகன்மாதாவைப் பிரார்த்திக்கிறேன்.

சென்னை

01-12-1986.

என். லலிதாம்பாள்

(பதிப்பாசிரியர்)

ஆசிரியர் முகவுரை

மனிதனாகப் பிறந்துவிட்டால் எவ்வளவோ கஷ்டங்கள், தொல்லைகள், ஆபத்துக்கள். இவ்வளவையும் சமாளிக்க ஒரு வழி இருக்கிறது. அது எல்லோருக்கும் தெரிந்ததுதான். தெய்வ அருள் என்பதுதான் அது. இந்த தொல்லை ஆபத்துக்கள் மூன்று விதம். இயற்கையில் தானே ஏற்படுவது பூகம்பம், வெள்ளம், எரிமலை வெடிப்பது. இம்மாதிரி (ஆதி தைவிகம்) பேய், பிசாசு, பூதம் முதலியவைகளால் ஏற்படும் தொல்லைகள். (ஆதி பௌதிகம்) நோய்நொடி (ஆதியாத்மிகம்) இவைகளால் ஏற்படுவது.

இவைகள் எல்லாம் விதிப்படி நடைபெறுவதுதானே! என்ன முயன்றாலும் இவைகளை தவிர்க்க முடியாததே என்று வாதாடலாம் மார்க்கண்டேயனுக்கு விதி 16-வயதுடன் ஆயுள் முடிவு என்று நிச்சயிக்கப்பட்டிருந்தது. ஆனால் தெய்வ அருளால் அவர் சிரஞ்சீவியானார். சப்தசதியின் ரிஷியும் அவரே. ஆகவே அம்பிகையின் அருட்கடாக்ஷத்தினால் எந்த இன்னல்களையும் தவிர்க்க முடியும்.

இந்த தாத்பர்யங்களை நீக்க சப்தசதி ஒரு அருமையான சாதனம். நவ துர்கைகள் நமக்கு நன்மை செய்ய வேண்டியே காத்துக் கொண்டிருக்கின்றனர். அவர்களை வழிபட்டு அவர்கள் அருளை எப்படிப் பெறுவது என்பதே இந்த புத்தகத்தில் வெளியிடப்பட்ட யந்திர மந்திரங்களின் முக்கிய நோக்கம்.

இதிலுள்ள யந்திரங்கள் வீட்டில் இருப்பதே ஒரு ரக்ஷை பகவத் சேவை என்ற பூஜை மலையாளத்தில் மிகப் பிரபலம் அப்பூஜையால் கைகண்ட பலன் சித்திக்கிறது.

கலியுகத்தில் கைகண்ட தெய்வமாக விளங்குபவர்கள் விநாயகரும், துர்க்கையும் தான், (கலௌ சண்டி விநாயகௌ) விநாயக வரப்பற்ற புஸ்தகம் வெளியிட்ட கையுடன் ஸ்ரீ நவ துர்க்காவைவும் வெளியிட்ட தெரிந்து அம்பிகையின் கிருபாகடாக்ஷம் தான்.

ஸ்ரீ கோவிந்தராஜ பிள்ளையவர்கள் ஆசாள்புரத்திலுள்ள அவருடைய கமலா நிலையத்தில் மாதா மாதம் சப்தசதி பாராயணம், சண்டி ஹோமம் செய்து அம்பிகையை வழிபட்டு வருகிறார்கள். இந்த தந்திர சாஸ்திரங்களில் நிபுணர்களாக உள்ளவர்கள் உதவியையும் அவர் பெற்றிருக்கிறார். அப்பேர்பட்ட அம்பிகையின் அருள் பெற்றவர் துணை எங்களுக்கு கிடைத்திருக்கிறது. இப் புத்தகம் அவர் நடத்தும்

நவராத்திரியில் சண்டிஹோமத்தில் வெளியிட்டது எங்களுக்கு கிடைத்தற்கரிய பாக்கியம்.

லலிதாலயா, மயிலாப்பூர்
01-12-1986.

எஸ். நடராஜன்
(நஜன்)

தேவி சூர்ணிகை

ஸ்வஸ்தி ஸ்ரீ ஸமஸ்த்த லோகா லோக சகல சராசராதி சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹார திரோத்தான அனுக்கிரஹ பஞ்சக்ருத்ய பாரயணீ நாராயணீ

பூர்வ தக்ஷிண பச்சிமோ உத்தரோத்யாதி தேவதா ஸ்வரூபே சகல வித்யா கலாபே

காமகிரி பூர்ணகிரி ஜாலந்த்ரரோட்டியாணாதி சதுஷ் ஷஷ்டி பீடாத்யா விருதே சரஸ் சந்திராக்ருதே சதுர்முகே த்ரிநேத்ரே

சங்க சக்ரகுடாம்ராதி சகல சஸ்தராஸ்த்ர பிரயோகே

கிரீட குண்டல தாடங்க கடக கராங்குலீக ஹார கேயூர காஞ்மன மல்லிகாதி ஜாதி சம்பக கல்ஹார கேதகி புஷ்பாத்யாலம் கிருதே

ஸிம்மா ஸனாங்கஸ்திதே சதுர் வேத ஷட் சாஸ்த்திர அஷ்டாதச புராணாதி ஷன்மதஸ்தாபனா சார்யே ஆர்யே

சங்கித ஸாஹித்ய பேரீம் சங்க மிருதங்க வீணாதி கானப்ரியே நாதப் பிரம்ம மயே

மூலாதார ஸ்வாதிஷ்டான மணிபூரக அனாஹத விசுத்தி ஆக்ஞா சக்ர ஸஹஸ்ராப்ஜநிலயே

ஆடக ரஜித மாணிக்ய வஜ்ர வைடூர்ய புஷ்பராக இந்திர நீலப் பிரவாள மௌதிகாபரண பூஷண பூஷிதே

அஷ்டாங்க யோககப்யாஸ நிரதே ஜோதிர்மயே சச்சிதானந்த ப்ரதே பிரும்மா விஷ்ணு ருத்ர ஸதாசிவ சுரா சுர பூஜிதே மதிராமிதே

ஜகத் குரோதக்த மூகாம்பிகே ரக்ஷ ரக்ஷது ரக்ஷமாம் பாஹிமாம் பாஹிமாம் ... பாஹி.

ஸ்ரீ நவதுர்க்கா 1

போகியாய் இருந்துயிர்க்கு போகத்தைப் புரிதல் ஓரார்
யோகியாய் யோக மூர்த்தி உதவுதலும் ஓரார்
வேகியினாற் போல் செய்த விளைவினை விட்டல் ஓரார்
ஊகியர மூடர் எல்லாம் உம்பரின் எருவன் என்பார்

- சிவஞான சித்தியார்

அருள் செல்வம், பொருள் செல்வம் அளிப்பது இறைவனின் போக வடிவம், ஞானத்தை அளிப்பது யோக வடிவம். துன்பங்களைப் போக்குவது வேகம் என்ற உக்கிர வடிவம்.

தாங்க முடியாத துன்பங்களை அகழிபோல் (துர்க்கம்) நின்று தடுப்பதால் துர்க்கை எனப் பெயர் பெற்றாள். அம்பிகை இதனால் தான் துர்கா ஸூக்தத்தின் முதல் ஸ்லோகத்தில்,

ஜாதவேதஸே ஸுநவாம ஸோமம
மராதீ யதோநித ஹாதிவேத:
ஸந: பர்ஷததி துர்க்காணி விஸ்வா
நாவேவ ஸிந்தும் துரிதாத் யக்னீ:

என்று பிரார்த்திக்கப்படுகிறது. இதனால் சத்ரு நிவர்த்தி, சகல துக்க நிவிருத்தி வேண்டப்படுகிறது.

உனக்கு சத்ரு எங்கே இருக்கிறான்? எங்கோ வெளியில் இருப்பதாக எண்ண வேண்டாம். உன்னுடனேயே உன் உடம்பில் காமம், மோகம், மதம், மாத்சர்யம், அசூயை, இப்படி பலவாறாக எதிரிகள் இருக்கிறார்கள். இந்த சத்ருக்களை ஒழித்துக் கட்ட அம்பிகையின் தயவு வேண்டும்.

இந்த துக்கம் எப்படி ஏற்படுகிறது? ஒரு பொருள் வேண்டும் என்ற ஆசை. அது கிடைக்கவில்லை என்றால் ஏமாற்றம் என்ற துக்கம். அது கிடைத்த பின் இழக்க நேர்த்தால் கைவிட்டுப் போய் விட்டதே என்ற சோகம். இம்மாதிரியான துக்கங்கள் ஏற்படாதவாறு அம்பிகை அனுக்கிரகம் செய்ய வேண்டும். இந்த அனுக்கிரகம் செய்ய அவள் பல சக்திகளாக விளங்குகிறாள்.

நவசக்திகள் என்று கூறப்படுபவர்கள், வாமை, ஜ்யேஷ்டை, ரௌத்ரீ, காளி, கலவிகரணி, பலவிகரணி, பலப்ரதமனீ, சர்வ பூததமனீ, மனோன்மணி.

பராசக்தியாகிய ஆதி சக்தியே வாமாதி சக்தி ரூபமாக பஞ்சக்கிருதம் செய்கிறாள். இதன் விளக்கம் சித்தாந்த சாராவளியில் பின் வருமாறு காணப்படுகிறது. இவர்கள் பராசக்தியின் நவசக்திகள்:

வாமை: - பிருத்வி தத்வ ரூபிணி, சிருஷ்டியின் பிரவர்த்திக்கு ஈஸ்வரன் வாமதேவர், அவர் சக்தி இவள்.

ஜ்யேஷ்டை: - ஜலதத்வ ரூபிணி ஜ்யேஷ்டா ஈஸ்வரனின் சக்தி.

ரௌத்ரீ: - அக்னி தத்வ ரூபிணி, ஈசன் பசுபதி, அவரே ருத்திரன், அவர் சக்தியானதால் ரௌத்ரீ.

காளி: - ப்ராணன் கால ரூபமானதால் காளீ. வாயுதத்வரூபிணி ஈசன் ஈசானன், அவரே காலர் எனப்படுவார். அவர் சக்தி காளீ.

கலவிக்ராணி:- கலா என்பது அவயம், விகரணி சூன்யம் அவயவய சூன்யம், கலவிக்ரணி ஆகாசம் அவயவய சூன்யம், இதற்கு ஈசன் பீமர். அவரே கலவிகரணர். அவர் சக்தி கலவிகரணி.

பலவிக்ரணி: - பலத்தை விஷேசமாக செய்வது. சந்திரன் ஓஷதிசனானதால் பலவிகரணி சந்திர மூர்த்தி, ஈசன் மகாதேவன் அவர் பலவிகரணர் அவர் சக்தி பலவிக்ராணி.

பல ப்ரதமனீ: - பலத்தையழிப்பது. சூரியன் உக்கிர கிரணனானதால் பலப்ரதமனீ சூரிய மூர்த்தி. அதற்கீசன் உக்கிரன். அவர் பலப்பிரதமர், அவர் சக்தி பலப்ரதமனீ.

சர்வ பூததமனி: - ஆன்மாவின் புண்ய பாபங்களை அடக்குவது ஆன்ம மூர்த்தி. இவர் சக்தி சர்வபூததமனி.

மனோன்மணி: - சிவமூர்த்தி. பக்குவமுள்ளவர்களை சிவத் தன்மையுடன் சேர்ப்பதால் மனோன்மணி.

இந்த ஒன்பது சக்திகளும் பராசக்தியைச் சுற்றி வித்யேச்வர சக்திகள் என்ற பெயருடன் விளங்குகிறார்கள்.

நவ துர்கைகள் என்பது பல நூல்களில் பலவிதமாகக் காணப்படுகிறது.

ஒருவகை: - சைலபுத்ரீ, பிரும்மசாரிணி, சந்திரகண்டா, கூஷ்மாண்டா, ஸ்கந்தமாதா, காத்யாயானீ, காளராத்திரீ, மகாகௌரீ, சித்திதா.

மற்றொரு வகை: - அக்னீ துர்க்கை, மகா துர்க்கை, ஜல துர்க்கை, பிரும்ம துர்க்கை, விஷ்ணு துர்க்கை, ருத்ர துர்க்கை, வன துர்க்கை, ஸ்தூல துர்க்கை, சூலிநி துர்க்கை.

1. பக்ஷி துர்க்கா 2. ப்ரமரதுர்க்கா 3. அதி துர்க்கை, 4. ஸிந்து துர்க்கை. இந்த நான்கு துர்க்கைகளும் தேவி பாகவதத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. அதில் காணப்படும் துர்க்கைகள்:

காரணாகலத்தில்	தச துர்க்கைகள்
1. ருத்ரா	1. வரேண்யா
2. சண்டா	2. வரதா
3. சசி	3. வரிஷ்ட
4. சைவா	4. வரவர்ணினீ
5. சண்டி	5. கரிஷ்டா
6. க்ருரா	6. வரார்ஹா
7. அனுசண்டிகா	7. வராரோஹா
8. நளமீ	8. நீலஜங்கா
9. உக்ர சண்டா	9. ஸந்நியா
	10. போகமோக்ஷதா

நன்றாக ஆராய்ந்து பார்த்தால் நவ சக்திகளுக்கும் நவ துர்க்கைகளுக்கு மிடையே சிறப்பியல்புகள் ஒன்றுபட்டிருப்பது புலப்படும்.

நவ காளிகள்

நவகாளி என்றே வங்களாத்தில் ஒரு இடம் உண்டு. தமிழ் நாட்டில் ஒன்பது காளிகள் பிரசித்தம். 1. சிறுவாச்சூர் மதுரகாளி (இவள் பல குடும்பங்களின் குல தெய்வம்) 2. தொட்டியம் மதுரகாளி (அங்குள்ள பறையோசைக்காகவே இவள் அங்கு கோவில் கொண்டிருக்கிறாளாம்), 3. உடையாளூர் செல்வமாகாளி இவளே மாடக்குடி என்ற இடத்திலும் கோயில் கொண்டிருக்கிறாள், 4. திருநாகேஸ்வரததிலுள்ள பச்சைக்காளி, பவழக்காளி, 5. திருவெண்காட்டிலுள்ள காளி (எதிரில் அகோரவீரபத்திரர்) 6. தில்லையில் தில்லைக்காளி, 7. கீழ்வேளூரில் ஐந்து வட்டத்துக் காளி, 8. காளையார் கோவிலில் சுவர்ண காளி, 9. கம்பர் மாகாளி (கதிராமங்கலம்)

பயத்தில் பிறந்த பக்தி

உலகில் தோன்றியிருக்கும் பிற பிராணிகளைக் காட்டிலும் பன் மடங்கு திறமையுள்ள மூளையைப் பெற்றிருந்தும், மனிதனுக்கு அச்சம் போகவில்லை, இயற்கை சக்தியைத் திறமையுடன் அடக்கி தன்னலத்திற்குப் பயன்படுத்திக் கொள்கிறான். எனினும் இயற்கை அன்னை அவனை ஏமாற்றி விடுகிறாள். இயற்கை அன்னையின் மகத்துவத்தைக் கண்டு அச்சமெழுவதுடன் வியப்பும் உண்டாகிறது. இத்தகைய நிலையை சிந்திக்கும்போது தனக்கெட்டாத சக்தி ஒன்றிருப்பதை தெரிந்து கொள்கிறான். அந்த சக்திதான் தெய்வம். மனித உற்பத்திக்கும், வாழ்க்கைக்கும், பிறப்புக்கும், இறப்புக்கும் காரணமாக இருக்கிற இயற்கை சக்தியை வணங்காமல் யாரும் இருக்க முடியாது.

கடல் கொந்தளிப்பு, வெள்ளப் பெருக்கு, புயல், பூகம்பம், எரிமலை திக்கக்குதல் ஆகிய இயற்கை உற்பாதங்களை அன்னை பராசக்தியின் "ஊழிக்கூத்து'' என்று பாரதியார் வருணிக்கிறார்.

நமது சாஸ்திரத்தில் "அத்விதிய பரசிவம்'' என்கிற தத்துவம் ஒன்று உண்டு. அத்தத்துவம் நாம் உய்யும் பொருட்டு சிவமாகவும் சக்தியாகவும் பிரிந்து செயல்படுகிறது. இவ்விரு தத்துவங்களும் ஒன்றுடன் ஒன்று பிரிக்க முடியாது. சக்தியே சிவம் சிவமே சக்தி இவ்விரண்டுக்கும் நாம ரூபம் இல்லை. ஆனால் அனுக்ரக நிமித்தம் பல ரூபங்களையும் நாமங்களையும் கொண்டு அச்சக்தி செயல் படுகிறது.

சண்டிகா, துர்க்கா, லட்சுமி முதலிய உருவங்கள் சக்தி தத்துவத்தின் அவதாரங்கள் பண்டாசுரன் மஹிஷாசுரன், சும்பநிசும்பன் முதலிய அசுரர்கள் இந்த அவதாரங்களால் நிக்ரஹம் செய்யப்படுகிறார்கள். இது அனுக்கிரகமே.

உண்மையில் அகத்தை, மமதை, காமக்ரோதம் ஆகிய அசுரத் தன்மையை அகற்றி நற்குணங்கள் அடைந்து பேரின்ப வீட்டை அடைய வேண்டும் என்ற உண்மையே சப்தசதி சுலோகங்களில் மறைந்திருக்கும் உண்மை.

தக்ஷிணாயன ஆரம்பத்தில் அம்பிகை உக்கிர ரூபியாக காணப் படுகிறாள் என்றும், உத்திராயன ஆரம்பத்தில் தேவி சாந்த ஸ்வரூபியாக தோன்றுகிறாள் என்பதும் கூறப்பட்டிருக்கிறது. மாரியம்மன், காளி முதலிய உக்கிர தெய்வங்களுக்கு ஆடி மாதம் வழிபாடு விசேஷம். சாந்த ஸ்வரூப தேவதைகளுக்கு தைமாத வழிபாடு விசேஷம்.

இந்த அம்பிகையை தேவர்கள் (சப்தசதியில்) செய்த ஸ்துதியில் முக்கியமான சுலோகம்.

துர்க்கே ஸ்ம்ருதா ஹரஸி பீதிமசேஷ ஜந்தோ:
ஸ்வஸ்தை: ஸம்ருதா மதி மதீவ சுபாம் ததாஸி
தாரித்ரிய துக்க பயஹாரிணி கா த்வதன்யா
ஸர்வோபகார கரணாய ஸதார்த்ர சித்தா !!

"அம்மா! துன்பம் வந்தபோது உன்னை நினைத்து வழிபடுபவர் களுடைய அச்சத்தை அகற்றுகிறாய். ஏழ்மை துக்கம், அச்சம் இவைகளைக் காற்றினில் தூசுபோல ஆக்குகிறாய் உன்னைப் போல கருணையுள்ளம் யாருக்கு உண்டு''.

பேராபத்திலிருந்து காப்பதாலேயே அவள் துர்க்கை எனப்படுகிறாள் என்று தேவி உபநிஷத் கூறுகிறது. இந்த அம்பிகை ஒன்பது எண்களில் எப்படி வியாபித்திருக்கிறாள் என்பதை பார்ப்போம்.

ஒன்பது எண்களில் அம்பிகை 2

"ஏகாக்ஷரீ, துவைதாக்ஷரீ, திரயக்ஷரீ, பஞ்சாக்ஷரீ
.... உன்பாதமதே சரணம் அம்மா"

அம்பிகை எல்லாமாகவும் இருக்கிறாள். அதிலும் 1 முதல் 9 எண்களின் ரூபமாகவும் இருக்கிறாள். அதை விளக்குவது இந்த அத்யாயம்.

ஒன்று என்ற எண் சூரியனைக் குறிக்கிறது. அதுதான் ஆரம்பம். அதிலிருந்து தான் மற்ற எண்கள் சிருஷ்டிக்கப்படுகின்றன. எல்லா எண்களுக்கும் அடிப்படையானது ஒன்றுதான். எல்லா உயிர்களுக்கும் ஆதாரம் போன்றது இந்த ஒன்றுதான் சிருஷ்டி சக்தியுடையதாய் தனிப்பட்டவையாய் இருப்பதை எல்லாம் இந்த ஒன்று குறிப்பிடுகிறது.

ஏகாக்ஷரத்தில் அன்னை

ஏகாக்ஷரி:- அம்பிகை இரண்டற்ற பொருளாக இருப்பவள்.

ஏகாக்ஷர பாராயணா, ஐம், ஹ்ரீம், ஓம் என்ற ஏக அக்ஷரங்களைப் பாராயணம் செய்வதால் திருப்தி அடைபவள்.

ஏகா அநேக ஸ்வரூபி, சந்திரன் ஒன்றே, ஆனால் நீர், குட்டை, குளம் முதலியவற்றில் பல சந்திரர்கள் காணப்படுவது போல அம்பிகை ஒருவளேயானாலும் பலவிதமான உள்ளங்களில் பிரதிபலித்து ஒன்றாகவும் அநேகமாகவும் விளங்குகிறாள். இதை "ஏகதா பஹுதா சைவ த்ருச்யதே ஜல சந்த்ரவத்" என்கிறது உபநிஷத்.

எண் இரண்டு

இரண்டாவது எண் சந்திரனுக்கு அடையாளமாக நிற்பது. இதற்கேற்ற நிறம் அம்பிகையின் நிறமான பச்சை.

நல்லது, கெட்டது, துக்கம், சுகம், பகல், இரவு இப்படி எல்லாம் இரண்டாகவே உள்ளவள்.

துவைதாக்ஷரி இரண்டாக இருப்பவள்.

ஓம் ஹ்ரீம் என்ற இரண்டையும் சேர்த்து சொல்லப்படும் துவைதாக்ஷர ரூபமாக உள்ளவள்.

திவிரூப:- சகுணம் நிர்க்குணம் என்ற இருவித பிரும்மத்தின் வடிவமானவள்.

"த்வே பிரஹ்மணீ வேதி தவ்வே" என்ற வேத வாக்யம் கவனிக்கத் தக்கது.

த்விபுஜ:- இரண்டு கைகளையுடையவள், மதுரை, மீனாக்ஷிக்கும், பாண்டியநாட்டு அம்பிகைகள் எல்லோருக்குமே இரு கைகள்தான்.

த்வந்த்வாதித:- மழை-வெயில், பசி-தாகம், சோகம்-மோகம், பிறப்பு-இறப்பு ஆகிய இயற்கை உற்பாதங்களால் தீண்டப் படாதவள்.

த்வையாதிக ஆசைக்கும் கோபத்திற்கும் இருப்பிடமான ரஜோ குணத்தையும் சோம்பல் கவனக்குறைவு இவைகளுக்குக் காரணமான தமோ குணத்தையும் கடந்தவள். அறிவு, ஆனந்தம் இவைகளுக்கு இருப்பிடமான ஸத்வ குணமூர்த்தி அவள்.

எண் மூன்று

மூன்று குருவுக்கு அடையாளமானது. ஒன்றிலிருந்து ஒன்பது வரை செல்லும் பிரதான சக்திக் கோடுகளின் ஆரம்பம் என்று எண்குறி சாஸ்திரம் கூறுகிறது. 3, 6, 9 இவ்வெண்கள் எந்தப் பக்கத்திலிருந்து கூட்டிய போதிலும் கடைசியாக 9 எண்ணே கிடைக்கும்.

த்ரயக்ஷரி மூன்றாக உள்ளவள்.

திரிதாமா:- உலகிற்கு பலவிதமான நன்மைகளை தரும் சூரியன், சந்திரன், அக்னி என்ற மூன்று ஜோதியாக இருப்பவள்.

ஓம் ஐம் ஹ்ரீம் என்ற மூன்று மந்திரங்களின் சுவரூபமாக இருப்பவள்.

திரேதாத்ரி வாகபல தாயகா

ஆஹவநீயம் கார்ஹபத்யம் தக்ஷிணாக்னி என்ற மூன்று அக்னிகளை உபாசனை செய்வதன் மூலம் அறம், பொருள், இன்பம் இம்மூன்றையும் அளிப்பவள்.

திரிகுணாத்மா:- சத்வம், ரஜஸ், தமஸ் என்று மூன்று குணங்களுடன் கூடிய மூலப் பிரகிருதியை தாங்கி நிற்பவள்.

திரிசக்தீச:- ஸ்ரீம், ஹ்ரீம், க்லீம் என்ற மூன்று சக்திகள் சேர்ந்த மந்திரத்தின் தலைவி, பிரபு சக்தி, உத்ஸாஹ சக்தி, மந்திர சக்தி என்று மூன்று சக்திகள் உருவானவள்.

சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் இம்மூன்றையும் இயக்குவிப்பவள். அவளே மும்மூர்த்திகளாகவும் விளங்குகிறாள்.

எண் நான்கு

இது சூரிய எண்ணான ஒன்றுடன் சம்பந்தப்பட்டது. நான்கு எண் யூரேனஸ் கிரகத்திற்கு அடையாளமானது.

அம்பிகை சதுராத்மாவாக இருக்கிறாள். ஆத்மோபநிஷத்தில் ஆத்மா, அந்தராத்மா, ஞானாத்மா, பரமாத்மா என்று நான்கு விதமாகக் கூறப் பட்டுள்ளது. அந்த நான்கு ஆத்ம ஸ்வரூபமாக இருக்கிறாள் தேவி. நான்கு வேதங்களை நான்கு முகமாகக் கொண்டவள் (சிதம்பரம் தில்லை காளி ஆலயத்தில் இந்த அம்பிகையை தரிசிக்கலாம்.)

ஸாம, தான, பேத, தண்டம் என்கிற நான்கு வித உபாய வடிவமாக உள்ளவள்.

பரா, பச்யந்தி, மத்யமா, வைகரீ என்ற நான்கு வாக்காக அம்பிகை விளங்குகிறாள். நாபியிலிருந்து கிளம்பும் சப்தம் கழுத்து வரை பரா, பச்யந்தி, மத்யமா என்று மூன்று நிலைகளை அடைகிறது. கழுத்திலிருந்து வாய்மூலம் வெளிப்படும்போது வைகரீ என்றழைக்கப்படுகிறது. "துரீயாம் வாசம் மனுஷ்யா வதந்தி" என்று இதை வேதம் கூறுகிறது. பேசுவதற்கு அம்பிகையின் அருள் வேண்டும். இல்லையேல் ஊமைதான்.

எண் ஐந்து

எண் ஐந்து புதன் கிரகத்திற்கு அடையாளமாக இருக்கிறது.

அம்பிகை பஞ்சாக்ஷராத்மாவாக விளங்குகிறாள். நாதம், பிந்து, மகாரம், உகாரம், அகாரம் என்ற ஐந்து எழுத்துக்களையுடைய பிரணவ ஓம்கார வடிவினள். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற பஞ்ச கிருத்யங்களை செய்பவள். ஆகாயம், வாயு, அக்னி, நீர், நிலம் என்ற பஞ்சபூதங்களைத் தாங்கி நிற்பவள்.

பஞ்சப்பிரணவ ஸ்வரூபிணி அம்பிகை, மந்திர சாஸ்திரத்தில் ஐந்து பிரணவங்கள் என்று வழங்கப்படும் ஓம், ஐம், ஹ்ரீம், க்லீம், ஸௌ: என்ற ஐந்து அக்ஷரங்களின் பொருளாக விளங்குபவள்.

பஞ்சபாணங்களை யுடையதால் பஞ்சபாணேஸ்வரி, ஸ்ரீ சக்ர பூஜையில் பிந்துவில் பஞ்ச பஞ்சிகா பூஜையில் பஞ்சபாணேஸ்வரீ அம்பிகை பீஜாக்ஷரங்களுடன் ஆராதிக்கப்படுகிறாள்.

பஞ்ச சிவாத்மகவாகவும் தேவி இருக்கிறாள். காமேச்வரரான பரமசிவனின் ஐந்து பீஜாக்ஷரங்களின் ஸ்வரூபமாக உள்ளவள்.

எண் ஆறு

எண் ஆறு சுக்கிர கிரகத்திற்கு அடையாளமாக விளங்குகிறது.

அம்பிகை மனித உடலில் ஆறு ஆதாரமாக விளங்குபவள். இதனால் ஷட்சக்ரதாமா என்று பெயர். மூலாதாரம் சுவாதிஷ்டானம், மணிபூரஹம், அனாகதம், விசுக்தி, ஆக்ஞை என்ற ஆறு சக்கரங்களில் அம்பிகை வியாபித்திருக்கிறாள்.

ஷட்கிரந்தி பேத:- மூலாதாரத்திலுள்ள பிரும்ம கிரந்திகள் இரண்டையும், மணிபூரகத்திலிருக்கும் விஷ்ணு கிரந்திகள் இரண்டையும் அனாகதத்திலுள்ள ருத்ரகிரந்தி இரண்டையும் குண்டலினி சக்தி உருவம் தாங்கி போதிப்பவள்.

ஷடத்வத்வாந்த தீபிகா:- பதம், புவனம், வர்ணம், தத்வம், கலை, மந்திரம் என்று மந்திர சாஸ்திரங்களில் கூறப்பட்ட ஆறு விதமான உபாசகர்களுக்கு வழிகளிலும் உள்ள இருளை அகற்றி அவ்வழிகளில் உபாசிக்க அருளுபவள்.

ஹிருதயம், சிரஸ், சிகை, கவசம், நேத்ரத்ரயம், அஸ்திரம் என்ற ஆறு விதமான சக்திகளால் சூழப்பட்டவள்.

அங்கன்யாஸம், கரன்யாஸம் செய்யும் பக்தர்களை இந்த ஆறு வித சக்திகள் காப்பாற்றுகின்றனர்.

பிறவி முதல் தீங்கு இழைக்கும் பகைவர்கள் ஆறு பேர். காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாத்சர்யம் இவைகளை த்வம்ஸிம்பவளாதலால் ஷட்வைரிவர்க வித்வம்ஸி என்று அம்பிகைக்கு பெயர்.

எண் ஏழு

இது நெப்டியூன் என்ற கிரகத்தின் அடையாளமானது. பூ:, புவ, ஸுவ, மஹ, ஜன, தப, ஸத்யம் என்ற சப்த லோகங்களின் ஈஸ்வரிகாயத்ரீ, உஷ்ணிக், அனுஷ்டுப், பிருஹதீ பங்தி திருஷ்டுப், ஜகதி என்ற ஏழு சந்தஸ்களுக்கு இருப்பிடமானவள்.

ஸப்தஸ்வராசர்ய: ஸ ரி க ம ப த நி என்ற ஏழு ஸ்வரங்களுடன் கூடிய நாதத்திற்கிருப்பிடமானவள்.

ஸப்தமாத்ரு நிஷேவித: ப்ரஹ்மி, மாகேஸ்வரி, கௌமாரீ, வைஷ்ணவீ, வாராஹி, நாராசிம்ஹி, மாஹேந்திரி என்ற ஏழு மாதர்களால் ஆராதிக்கப் படுகின்றவள்.

எண் எட்டு

இது சனிக் கிரகத்திற்கு அடையாளம். அம்பிகை அஷ்டமூர்த்தியாக தியானம் செய்யப்படுபவள்.

சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம், கந்தம் என்ற ஐந்து தன்மாத்திரைகள், அஹங்காரம், மகத்துவம், மூலப்பிரக்ருதி எனப்படும். இவ்வுலகின் எட்டு கரணங்களுக்கும் காரணமாக இருப்பவள். ஆகாயம் முதலிய ஐந்து பூதங்கள், சூரியன், சந்திரன், புருஷன் ஆகிய அஷ்டமூர்த்தி உருவங்களிலும் தியானம் செய்யப்படுபவள்.

யமம், நியமம், ஆஸனம், பிராணாயாமம், பிரத்யாஹாரம், தாரணை, தியானம், சமாதி என்ற எட்டு யோகங்களின் பலனை அளிப்பவள். தன்னை வழிபடுபவர்களுக்கு அணிமா, மஹிமா, கரிமா, லகிமா, பிராப்தி, பிராகாம்யம், ஈசித்வம், வசித்வம் என்ற எட்டு விதமான சக்திகளை அளிப்பவள்.

ஆறு ஆதாரங்களுடன் குலம் அகுலம் என்ற இரண்டையும் சேர்த்து எட்டு ஆதாரக் கிரகங்கள். இந்த எட்டில் வசிப்பவள் "அஷ்டசக்ரா நவத்வாரா தேவாநாம்" என்பது வேத வாக்யம்.

எண் ஒன்பது

இது அங்காரக கிரகத்திற்கு அடையாளமானது. ஒன்பது துவாரங்கள் கொண்ட இந்த உடலில் அம்பிகை ஜீவாத்மா வடிவில் பிரவேசித்து அதனை உயிர் வாழும்படி செய்து கொண்டிருக்கிறாள்.

நவ துர்க்கா நிஷேவித:- சைலபுத்திரி, பிரும்மசாரிணி, சந்திரகண்டா, கூஷ்மாண்டா, ஸ்கந்தமாதா, காத்யாயனீ, காளராத்ரீ, மகா கௌரீ, ஸித்திதா என்று தேவீ கவசத்தில் கூறப்படும் ஒன்பது துர்க்கைகளாலும் மந்திர மஹார்ணவத்தில் கூறப்படும் ஜயா, விஜயா, பத்ரகாளீ, ஸுமுகி, துர்முகி, ப்ரச்ஞா, வியாக்ரமுகீ ஸிம்ஹமுகீ என்ற ஒன்பது துர்கைகளாலும் பூஜிக்கப்படுபவள் அம்பிகை. நவராத்திரியில் வழிபடுவதால் சந்தோஷமடைபவள்.

குமாரி பூஜையில் நவ துர்க்கைகள்

குமாரி பூஜையில் குமாரி, திரிமூர்த்தி, கல்யாணி, ரோகிணி, காளிகா, சண்டிகா, சாம்பவீ, துர்க்கா, சுபத்ரா என்ற பெயர்களால் பூஜிக்கப்படு கிறாள். இந்த ஒன்பது பேர்களும் துர்க்கையின் ஸ்வரூபங்களே என்று

மந்திராக்ஷர மயீம் தேவீம் மாத்ருகா ரூபதாரிணீம் !
நவ துர்க்காத்மிகாம் சாக்ஷாத் கன்யமாவாஹயாம்யஹம் !!

இந்த சுலோகத்திலிருந்து தெரிகிறது.

சுவாஸினி பூஜையில் நவ துர்க்கைகள்

சுவாஸினி பூஜையில் சைலபுத்திரி, பிரஹ்மசாரிணி, சந்திரகண்டா, கூஷ்மாண்டா, ஸ்கந்தமாதா, காத்யாயனி, காளராத்ரீ, மகா கௌரீ, ஸித்திதாத்ரீ என்ற பெயர்களுடன் பூஜிக்கப்படுகிறாள். இவர்களும் துர்க்கைதேவியின் ஸ்வரூபங்களே என்று

மந்திராக்ஷர மயீம் தேவீம் மாத்ருகா வர்ண ரூபிணீம் !
நவ துர்க்காத்மிகாம் மேதாம் சுவாஸிநீம் பூஜயாம்யஹம் !!

என்பதிலிருந்து தெரிகிறது.

மூல துர்க்கை

நவ துர்க்கா த்யானம்

துர்கே சூலினி ஜாதவேதஸி
மஹா சாந்த்யாஹ்வயே சாபரி
ஜ்வாலா துர்கி வாராபிதே
லவணகே தீபாபிதே ஹ்யாஸுரி
ஏஹ்யம்பே புரதோ மமாத்ய
பயக்ருத் ரோகாரி பீடாதிமான்
வித்வஸ்தான் குரு தேஹி
ஸௌக்ய மதுலம் பக்திம் ததா வ்யாஹதாம்

1. மூல துர்க்கா
2. வன துர்க்கா
3. சூலினி துர்க்கா
4. ஜாதவேதோ துர்க்கா
5. சாந்தி துர்க்கா
6. சபரீ துர்க்கா
7. ஜ்வல துர்க்கா
8. லவண துர்க்கா
9. தீப துர்க்கா
10. ஆஸுரி துர்க்கா

மூல துர்க்காவைச் சேர்க்காமல் நவ துர்க்கைகள்.

ஸ்ரீ நவாக்ஷரீ * மகா மந்திரங்கள் தேவதைகள் மகா காளீ, மகா லக்ஷ்மீ, மகா சரஸ்வதீ ஆகிய முப்பெரும் சக்திகள். இவர்கள் முறையே மதுகைடபர், மகிஷாசுரன், சும்ப நிசும்பர் என்ற அக்ஷுரர்களைக் கொன்று உலகம் உய்ய அருள் புரிந்தவர்கள். இம் மூவருடைய பெருமைகளை தேவி மகாத்மியம், தேவி பாகவதம் முதலிய நூல்கள் விஸ்தாரமாக வருணிக்கின்றன.

ஒன்பது சக்தி பரமான எண். அதனால் தான் நவாக்ஷரீ என்ற 9 எழுத்துக்கள் இந்த சக்தி மந்திரத்தில் இடம் பெற்றுள்ளன.

---

* நவாக்ஷரி தியானம்

மாதர்மே மதுகைடபக்னி மஹிஷ
ப்ராணா பஹரோத்யமே
ஹேலாநிர்மித தூம்ரலோசன
வதே ஹே சண்ட முண்டார்த்தினி
நி: சேஷிக்ருத ரக்தபீஜ தனுஜே
நித்யே நிசும்பாஹே சும்ப தவம்ஸினி
ஸம்ஹாராக துரிதம் துர்க்கே நமஸ் தேம்பிகே.

ஐம் ஹ்ரீம் க்லீம்	3
சாமுண்டாயை	4
விச்சே	2
ஆக	9

"ஐம்" சித்தி ஸ்வரூபிணியான மகா சரஸ்வதி. "ஹ்ரீம்" சித்தாத்ம ஸ்வரூபிணியான மகா லக்ஷ்மி. "க்லீம்" ஆனந்த ரூபிணியான மகா காளீ. இந்த நவாக்ஷரி மந்திரத்திற்கு மார்க்கண்டேயர் ரிஷி, ஜகதீஸ் சந்தஸ், துர்க்கா லக்ஷ்மி சரஸ்வதி தேவதை. இந்த மூன்று சக்திகளுக்கும் மூலமானவள் "மூல துர்க்கா" மகா லக்ஷ்மி என்ற பெயருடையவள். மகிஷாசுரனை கொன்றதால் மகிஷமர்த்தினி என்ற பெயர் ஏற்பட்டது.

யஸ்யா: பரதரம் நாஸ்தி ஸைஷா துர்க்கா ப்ரகீர்த்திதா !
துர்க்காத் ஸம்த்ராயதே யஸ்மாத் தேவி துர்க்கேதி கத்யதே !!

உலகம் அனைத்திற்கும் மகா லக்ஷ்மி துர்க்கா தேவி எனப்படும் ஆதி பராசக்தியே முதலானவள். அவள் சத்வம், ரஜஸ், தமஸ் என்ற முக்குணங்களுக்கும் இருப்பிடமானவள். முக்குணங்களை ஒருங்கே பெற்றவளாயினும் தனித்தனியே அந்தந்த குணங்களுக்கான வடிவங்களை எடுத்துக்கொண்டாள். இவளே அஷ்டாதசபுஜ மகா லக்ஷ்மி. *

தமோ குணப்ரதமான அம்சம் மதுகைடபர் என்ற அசுரர்களை அழித்தது.

பபார ரூபமபரம் தமஸா கேவலே நஹி

என்று மந்திர சாஸ்திரம் கூறுகிறது. அப்போது அவள் மஹா மாயா, மஹா காளி, மஹா மாரி என்று விளக்குகிறாள்.

சத்வ குணத்தில் மஹா வித்யா, மஹா வாணீ, பாரதி, சரஸ்வதி என்ற நாமங்களுடன் விளங்குகிறான். சும்ப நிசும்பர்களை அழித்தது இந்த சத்வ குணத்தினால்தான்.

ரஜோ குணத்தை மேற்கொண்டபோது தான் மஹிஷாசுரனை சம்ஹரித்தாள்.

---

* அஷ்டா தச புஜ மகா லக்ஷ்மிக்கு தருமபுரத்தில் விசேஷ சந்நிதியுள்ளது. சேலம் ஸ்கந்தாஸ்ரமத்தில் அம்பிகையின் பஞ்சலோக விக்ரஹ சந்நிதி விசேஷ சாந்நித்யம் பெற்று விளங்குகிறது. சென்னை அடையாறு பத்மநாபஸ்வாமி ஆலயம் பிரகாரத்தில் இந்த அம்பிகை தான் பட ரூபத்தில் பூஜிக்கப்படுகிறாள்.

இம்மூன்று வடிவங்களும் ஒன்றானவளே அஷ்டா தச புஜ மகா லக்ஷ்மி. இவள் தன் 18 கரங்களில் தாங்கியுள்ள பொருள்களைப் பற்றி வைகிருதி ரகஸ்யத்தில் கூறப்பட்டுள்ளன.

அஷ்டாதச புஜா பூஜ்யா ஸா ஸஹஸ்ர புஜா ஸதீ !
ஆயுதான் யத்ர வக்ஷ்யந்தே தக்ஷிணாத: கர: க்ரமாத் !!

அக்ஷமாலா ச கமலம் பரணோஸி குலிசம் கதா !
சக்ரம் திரிசூலம் பரசு: சங்கோ கண்டாச பாசக: !!

சக்திர் தண்டச்சர்ம சாபம் பானபாத்ரம் கமண்டலு: !
அலங்க்ருத புஜா மேபி: ஆயுதை: கமலாஸனா !!

வலப்புறம் கீழிலிருந்து மேலாக:- அக்ஷமாலை, தாமரை, பாணம், கத்தி, வஜ்ராயுதம், கதை, சக்ரம், திரிசூலம், கோடாரி, சங்கு, மணி, பாசக்கயிறு, சக்தியாயுதம், தண்டம், கேடயம், வில், பானபாத்ரம், கமண்டலம் முதலியன.

தாமரையில் நிற்பதால் லக்ஷ்மியாகவும், அக்ஷமாலை கமண்டலம் இவைகளால் சரஸ்வதியாகவும், பிற கருவிகளால் துர்க்கா தேவியாகவும் அஷ்டாதச புஜ மகா லக்ஷ்மி விளங்குகிறாள்.

இந்த அஷ்டதச புஜதேவியின் மகிமைகளும், உபாஸனாமுறையும் விரிவாக "ரஹஸ்யத் திரயம்" என்ற பகுதியில் கூறப்பட்டு உள்ளது. இவள் உலகெங்கும் எல்லாப் பொருள்களிலும் வியாபித்து அப்பொருளாகவே விளங்குகிறாள் என்றும் அது கூறுகிறது.

ஸர்வஸ்யாத்யா மஹா லக்ஷ்மீஸ்
த்ரிகுணா பரமேஸ்வரி !
லக்ஷ்யா லக்ஷ்ய ஸ்வரூபா ஸா
வ்யாப்ய க்ருத்ஸ்நம்வ்யவஸ்திதா !!

இதில் தேவி அணுவிலும் அணுவாக இருக்கும் தன்மை கூறப்படுகிறது.

துர்க்கா தேவி மகிஷாசுர சம்ஹாரிணியாக ரூபமெடுத்து சிங்கத்தையே வாகனமாகக் கொண்டு தோன்றுகிறாள். மகிஷாசுரன் என்பது அறிவின்மையின் அறிகுறி. தேவி அக்ஞானத்தை தீர்த்தாக்ஷிண்யமாக ஒழிக்கவென்றே அவதரித்திருக்கிறாள். இந்த துர்க்கா தேவி ஒன்பது விதமாக ஆவிர்பவித்து அனுக்கிரகிக்கிறாள்.

ஒன்பது துர்க்கைகள் 3

1. வன துர்க்கை

வனம் என்றால் காடு. அக்காடுகளில் வசிக்கும் துர்க்கை என்று மேலெழுத்தவாரியாகப் பதில் செல்லலாம். தன்னிடம் சரணமடைந்தவர்களை சம்சாரமாகிய காட்டிலிருந்து காப்பாற்றுபவள் என்ற அர்த்தம்.

ஸ்ரீ லலிதா சகஸ்ரநாமத்தில் "ஆத்ம வித்யா, மகா வித்யா, ஸ்ரீ வித்யா, காமசேவிதா, என்ற நாமங்களுக்கு ஸ்ரீ பாஸ்கர ராயர் பாஷ்யம் எழுதுகையில் மகா வித்யா என்றால் மகா துர்க்கா என்று குறிப்பிட்டிருக்கிறார்.

பண்டைத் தமிழ் நாட்டில் வன துர்க்கை வழிபாடு மிகப் பிரபலமாக இருந்ததாக சங்க நூல்களிலிருந்து தெரிய வருகிறது. இவ் வன துர்க்கையே கொற்றவை என்றழைக்கப்பட்டாள்.

சப்த பிரபஞ்சம் என்பது பரா, பச்யந்தி, மத்யமா, வைகரீ என்ற வாக்குகளைக் குறிப்பிடும். சூரியன், சந்திரன், அக்னி இம் மூன்றும் சேர்ந்து அர்த்தப் பிரபஞ்சம். இந்த சப்த பிரபஞ்சத்தையும் அர்த்த பிரபஞ்சத்தையும் வன துர்க்கா உணர்த்துகிறாள்.

அகஸ்தியர் இந்த அம்பிகையை வனத்தில் வழிபட்டு அவள் அருளால் விந்திமலையின் கர்வத்தை அடக்கினார்.

வன துர்க்கைக்கு ஆலயங்கள் தமிழ்நாட்டில் தருமபுரத்தில் ஆனந்த பரவசர் பூங்காவிலும் கதிராமங்கலத்திலும் உள்ளன. கொல்லூரில் ஆதிசங்கரரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட வன துர்க்கை கோவில் உள்ளது.

கதிராமங்கலம் (கும்பகோணம் தாலுக்கா குத்தாலத்திலிருந்து 3 மைல்) வன துர்க்கை கம்பரால் வழிபடப்பட்டவள். ஆகாயம் தெரியும்படி கீற்றுக் கொட்டகையிலேயே அம்மன் அவள் விருப்பப்படியே இருந்தாள். மழை பெய்தாலும், வெயில் அடித்தாலும் அம்பிகையின் மீது படும். இதனால் இந்த அம்பிகைக்கு ஆகாச துர்க்கை என்று பெயர் ஏற்பட்டது. இப்போது செங்கல் கட்டிட கூறை இருந்தாலும் ஒரு சாண் அகலத்திற்கு ஆகாயம் தெரியும்படி திறக்கப்பட்டுள்ளது.

ராகுவுக்கு அதிதேவதை துர்க்கை. முன்பக்கம் அம்பிகையின் உருவம், பின்பக்கம் சர்ப்பம் மாதிரி அமைப்பு.

2. சூலினி துர்க்கை

சூலபாணியாக விளங்குவதால் சூலினி என்று பெயர் ஏற்பட்டது. சூலத்திற்கு மூன்று அங்கம் உண்டு. அம்பிகை மும் மூன்றாக உள்ள எல்லா ரூபமாகவும் இருக்கிறாள் என்பதை திரிபுரோபநிஷத் விளக்குகிறது.

சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் என்ற காரியங்கள் மூன்று. அம் மூன்றையும் செய்பவள். சத்வம், ரஜஸ், தமஸ் என்ற முக்குணங்களாகவும் இருக்கின்றவள். சூரியன், சந்திரன், அக்னி என்று மூன்று சுடராகவும் விளங்குபவள். இம்மாதிரி எல்லாமே மூன்றாக இருந்து அதற்கு அப்பாலும் துரீயமான நான்காவதாகவும் விளங்குபவள்.

"ஜடமான ஞான, க்ரியா, இச்சா சக்திகளான மூன்று ரேகைகளும், ஜாக்ரத் ஸ்வப்ன சுஷுப்தி துரீயங்களின் ஸ்தானங்களும் கண், கழுத்து, ஹிருதயம் ஆகிய ஸ்தானங்களும் பூர், புவஸ், ஸுவ என்ற லோகங்களும், சத்வம், ரஜஸ், தமஸ் என்ற மூன்று குணங்களும் இன்னும் மும்மூன்றாக உள்ள சகலமானவைகளும் எவளை ஆச்சரயித்து நிற்கின்றதோ அவளே சூலினி துர்க்கை" என்கிறது திரிபுரோபநிஷத்.

சரீரம்	3. ஸ்துலம், சூக்ஷமம், காரணம்.
மார்க்கங்கள்	3. கர்மம், உபாஸனை, ஞானம்.
பிரணவத்தின் எழுத்து	3. அ, உ, ம.
சக்திகள்	3. இச்சா, கிரியா, ஞானம்.
லோகம்	3. பூ, புவ, ஸுவ.
குணங்கள்	3. சத்வம், ரஜஸ், தமஸ்.
நிலை	3. ஜாக்ரத், ஸுவப்ன, சுஷுப்தி.
தேவியின் நிலை	3. சத், சித், ஆனந்தம்.
தேவியின் முகங்கள்	3. ஹ, ஸ, ஹ.
ஜோதி	3. சூரியன், சந்திரன், அக்னி.
காரியம்	3. சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம்.

மகா தேவியின் சரீரம் ஓம்கார ரூபமாயும் (சித் ஸ்வரூபமாகவும்) ஹ்ரீம்கார ரூபமாயும் (சக்தி ஸ்வரூபமாகவும்) இரண்டும் சேர்ந்து ஓம், ஹ்ரீம், ரூபமாய் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது.

திரபுர சம்ஹாரம் செய்ய முனைந்த சிவபெருமானுக்கு சூலம் ஏந்திய கையுடன் பக்கத் துணையாக இருந்தவள் இந்த சூலினி தான். யுத்தக் களத்தில் ராவணனை சம்ஹரிக்க இவள் தயவு வேண்டி ராமர் இவளை பூஜித்து இவள் அனுக்கிரகத்தைப் பெற்றார்.

3. ஜாதவேதோ துர்க்கை

அக்னி வடிவில் விளங்கும் பராசக்தியே ஜாதவேதோ துர்க்கை. அக்னி சக்தியே என்று பல இடங்களில் இவளை துர்க்கா ஸூக்தம் குறிப்பிடுகிறது. ஜாதவேதேஸே என்றே இது ஆரம்பமாகிறது. அதில் இரண்டாவது மந்திரம். செந்தீ வர்ணத்தினள் என்றும் தன் ஒளியால் பகைவர்களை எரிப்பவள் என்றும் குறிப்பிடுகிறது. நான்காவது மந்திரத்தில் ஆபத்தைப் போக்கும் அக்னி சக்தியே என்று இத்தேவி அழைக்கப்படுகிறாள்.

வேதங்களில் அக்னி மிக முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. அதன் ரூபமாக இருப்பவள் அம்பிகை. ஆறாவது மந்திரம் "அக்னியே! யாகங்களில் போற்றப்பெறும் நீ இன்பத்தை வளர்க்கிறாய். காம பலனை அளிப்பதும், ஹோமத்தைச் செய்வதும். ஸ்தோத்திரம் செய்யப்படுவதும் நீயேயாகின்றாய். உக்கிரமுள்ள தேவதைகள் பலருக்கு தலையில் கொழுந்துவிட்டு எரியும் அக்னி ஜ்வாலை இருப்பதைக் கண்டிருக்கலாம்.

சிவன் நெற்றிக் கண்களினின்றும் எழுந்த தீப்பொறிகளை அம்பிகை அக்னி ஸ்வரூபமாக இருந்து கங்கையில் கொண்டு சேர்த்ததினால் இவன் ஜாதவேதோ துர்க்கை என்று அழைக்கப்படுகிறாள். (இவள் கங்கையில் கொண்டு சேர்ந்தால் சிவ தேஜஸே பின் முருகனாக உருவெடுத்தது)

இவளை அக்னி துர்க்கை என்று அழைக்கலாம். அக்னி வீரபத்திரர் என்பவர் இவள் அம்சமாகத் தோன்றியவர்தான். இவருடைய உருவச்சிலை மதுரை மீனாக்ஷி அம்மன் ஆலயத்தில் சுந்தரேஸ்வரர் சந்நிதியிலுள்ளது.

பிரும்மாவின் முகத்திலிருந்து சிவப்பாக ஒரு தேஜோ ராசி தோன்றியது. அது கொஞ்சம் சீதளமாகவும், கொஞ்சம் உஷ்ணமாகவும் இருந்தது. சிவனிடமிருந்து வெளுப்பான ஒரு தேஜோ ராசி தோன்றியது. பார்க்க முடியாததாகவும், பயங்கரமாகவும் இருந்தது. கருப்பு நிறத்துடன் ஒரு தேஜோ ராசி மகாவிஷ்ணுவிடமிருந்து கிளம்பியது. இந்த மூன்று தேஜஸ்களிடமிருந்தும் அம்பிகை தோன்றினாள்.

சிவன் தேஜஸ் தேவியின் முகம். யமன் தேஜஸ் தேவியின் தலைமயிர். அக்னியின் தேஜஸ் மூன்று கண்கள். வாயுவின் தேஜஸ் இரு காதுகள். குபேரன் தேஜஸ் மூக்கு. பிரஜாபதி தேஜஸ் பற்கள். அருணன் தேஜஸ் சிவந்த உதடு விஷ்ணுவின் தேஜஸ் 18 புஜங்கள்.

கேன உபநிஷத்தில் அம்பிகை ஒரு மாபெரும் ஜோதியாக கர்வமடைந்த தேவர்கள் முன் தோன்றியதாக வருணிக்கப்பட்டு உள்ளது.

4. சாந்தி துர்க்கை

கோபம் வந்தால் அதிக காலம் நீடிக்ககூடாது. அமைதி ஏற்பட வேண்டும். நரசிம்மஸ்வாமியின் கோபத்தை அடக்க யாராலும் முடியாத காரணத்தால் தேவர்கள் லக்ஷ்மியை நாடி அவள் மூலம் நரசிம்மத்தை சாந்தியடையச் செய்தனர். இதே மாதிரி தக்ஷ யக்ஞத்தில் சிவபெருமானுக்கு உண்டான கோபத்தை தணிக்க பராசக்தியின் தயவே வேண்டியிருந்தது. அப்படி தணித்த பராசக்தியே சாந்தி துர்க்கை எனப்படுகிறாள்.

துர்வாஸர் மகா கோபி. எடுத்ததற்கெல்லாம் கோபம் வந்துவிடும். இந்தக் குறையை அவர் அறியாதவர் அல்ல. இருந்தாலும் அதை அடக்க அவரால் முடியவில்லை. அம்பிகையின் அருள் பெற்றே அவர் கோபத்தை கைவிட முடிந்தது.

காஞ்சி காமாக்ஷி ஆலயத்தில் ஆதிசங்கரர் சந்நிதிக்கெதிரில் கோபம் நீங்கிய துர்வாஸரை தரிசிக்கலாம். சாந்தி என்பது நவரஸங்களில் ஒன்றாக இப்போது கருதப்பட்டாலும் முன்பெல்லாம் இது நவரஸங்களில் சேர்க்கப்படவில்லை.

எல்லோரும் விரும்புவது அமைதி அல்லது சாந்தி தான். அம்மாதிரி சாந்தி நிலை ஏற்பட்டால்தான் எந்தக் காரியமும் சாத்தியமாகும். அதனால்தான் உபநிஷத் பாடங்களில் முன்பும் கடைசியிலும் சாந்தி சாந்தி சாந்தி என்று சொல்லும் சாந்திப் பாடம் அமைக்கப்பட்டுள்ளது.

துர்க்கையை பல ஆலயங்களில் சாந்தி முகத்துடன் காணலாம். இவர்களில் மிகப் பிரபலமானவள் திருவாள் ஒளி புதூர் துர்க்கை. இது மிகவும் விசேஷமான சந்நிதி.

இந்த சாந்தி துர்க்கையை வழிபடுவதன் மூலம் கடன் தொல்லை, ரோகம், பேய், பிசாசு உபத்திரவங்கள் நீங்கும்.

5. சபரி துர்க்கை

இறைவன் வேடனாக ரூபம் தரிக்க நேர்ந்ததால் இறைவியும் வேடச்சியாக உருமாற வேண்டியதுதானே ! அர்ஜ்ஜுனன் பாசுபதாஸ்திரம் பெற சிவனைக் குறித்து தவம் செய்தான். அவனைப் போருக்கிழுத்து அருள் செய்ய சிவபெருமான் திருவுளம் கொண்டார் சரி ! அவர் மட்டும் போகலாமே ! கூட அம்பிகை எதற்கு?

ஆதிசங்கரர் தன் ஸ்துதியில் யமன் வந்து அழைக்கும் என் கடைசி காலத்தில் நீர் என் தாய் உமையுடன் வரவேண்டும் என்று பிரார்த்திக்கிறாரே, ஏன்?

ராமர் வனவாசத்தில் சக்தியான சீதாதேவி கூட இருந்த போதெல்லாம் சிஷ்ட பரிபாலனமே நடந்தது. தேவி பிரிந்து இருந்த காலத்தில் தான் துஷ்ட நிக்ரஹம் நடைபெற்றது. ஆகவே அம்பிகை மட்டும் வேடச்சி ரூபத்தில் இறைவனுடன் கூட வந்திருக்காவிட்டால் அர்ஜுனன் மன்மதன் கதியை அடைந்திருக்கலாம். யார் கண்டார்கள்?

கருணை காட்டுவதில் அநேகமாக காரணம் இருக்கும். பிள்ளை களிடம் பாசம் வைத்து வளர்ப்பது பிற்காலத்தில் அவன் ரக்ஷிப்பான் என்ற சுயநலம் இருக்கும். இம்மாதிரியே காரணம் இல்லாமல் இத்தகைய காரியங்கள் நடைபெறுவதில்லை. ஆனால் அம்பிகை எவ்வித நோக்கமுமின்றி கருணை காட்டுகிறாள். அதனால் தான் அவளுக்கு "அவ்வியாஜ கருணாமூர்த்தி'' என்று ஒரு நாமம் லலிதா சகஸ்ரநாமத்தில் இருக்கிறது. அம்பிகை வேட்டுவச்சிக் கோலம் பூண்டதால் சபரி என்று அழைக்கப்படுகிறாள்.

6. ஜ்வலத் துர்க்கை

ஸ்ரீ லலிதா பரமேஸ்வரி பண்டாசுரனோடு சண்டையிடும் போது சத்ரு சேனை உள்ளே வராதிருக்க அக்னி பிராகாரம் அமைத்து ஜ்வாலை மயமாய் இந்த துர்க்கை நின்று சக்திசேனையை காத்ததால் இவளை "ஜ்வலத் துர்க்கை'' என்று அழைக்கிறார்கள்.

எப்பேர்ப்பட்ட அரண்களையும் தாண்டி வந்து விடலாம். மண், கல், கோட்டைகளை இடித்துக்கொண்டு உள்ளே புகுந்து விடலாம். ஜலம் கொண்ட அகழியில் நீந்தி வந்து விடலாம் ஆனால் அக்னியால் பாதுகாக்கப்படும் கோட்டையில் கைவரிசையைக் காட்டினால் பஸ்பமாகப் போக வேண்டியதுதான். இத்தோல்வியைக் குறிப்பதே ஜ்வாலா மாலினி க்ஷிப்த வஹ்நி பிராகார மண்டலா என்ற லலிதா சகஸ்ரநாமத்திலுள்ள நாமம்.

இந்த ஜ்வல துர்க்கை அம்பிகையின் முகத்திலிருந்து பாதி அம்சமாக உண்டானவள். ஒரு க்ஷணத்தில் உலகெல்லாம் அழிக்கும் சக்தியுள்ளவள்.

7. லவண துர்க்கை

லவணம் என்றால் உப்பு. உப்பு போடாமல் உணவு அருந்தினால் ருசிக்காது. உப்பு அதிகமாகப் போட்டாலும் உணவு கெட்டு விடும். அளவோடு உபயோகிக்க வேண்டியப் பொருள் உப்பு.

வாழ்க்கையில் எதுவும் அளவோடு இருக்க வேண்டும் கோப மோக மத மார்ச்சயம் முதலியவைகள் கூடவே கூடாது. அப்படியிருந்தால் ஒரு சிறிது இருக்கவேண்டும். பின்னர் அறவே அகற்றப்பட வேண்டும்.

வைஷ்ணவ சம்பிரதாயத்தில் "இவள் உப்புபோல் இருப்பாள்" என்று சொல்வதுண்டு உப்பு எவ்வளவு அவசியமோ அதைப்போல அத்தியாவசியமாகவும் அதே சமயம் வாழ்க்கை இன்பம் இதர சுகபோகங்களில் மிகவும் அளவுடன் இருப்பாள் என்று இதற்கு அர்த்தம். இம்மாதிரி உப்புபோல இருப்பதற்கு எல்லோருக்கும் வந்துவிடாது. பக்தியில் உப்பைப் போல கரைந்து இறைவனுடன் (உப்பு தண்ணீரில் கலந்து தன் உருவத்தை இழப்பதுபோல) கலந்து விடவேண்டும். இதற்கு அம்பிகையின் அருள் அவசியம். அந்த அருளைத் தருபவளே லவண துர்க்கை.

"தண்ணீரில் உப்பு கரைவதுபோல அம்பிகையின் தியானத்தில் தன்னை கரைத்துக்கொள்பவள் ஆத்ம ஞானி. அவனது ஆத்ம ஸ்வருபமே பரதேவதையான அம்பிகை. சித்தம் ஒரு முகப்படுத்தவே சித்தி, பாவனை செய்வதே உபசாரம். நான், நீ, உண்டு, இல்லை செய்யத்தக்கது, செய்யத்தகாது இந்த வேறுபாடுகளை எல்லாம் ஆத்மாவில் லயம் செய்தலே ஹோமம்" என்கிறது பாவனோபநிஷத்.

உலகிற்கு தீங்கிழைத்த வைணாசுரனை அழித்து வரும்படி ராமர் லக்ஷ்மணரை அனுப்பினார். அந்த அசுரனை அழித்து லக்ஷ்மணன் வெற்றியுடன் வரவேண்டும் என்று ராமர் துர்க்கையை உபாசித்தார். அவள் அருளால் லக்ஷ்மணன் வைணனைக் கொன்றான். இதனால் இந்த அம்பிகை லவண துர்க்கை என்று பெயரையும் பெற்றாள்.

8. தீப துர்க்கை

இருள் என்ற அந்தகாரமே அறியாமை. ஒரு அறையில் இருள் சூழ்ந்து அங்குள்ளப் பொருள்கள் நம் கண்ணுக்குத் தெரியவில்லை என்றால் அங்கு பொருள்களே இல்லை என்று அர்த்தமில்லை, விளக்கு ஒளி ஏற்பட்டால் அந்த இடத்திலுள்ள பொருள்கள் கண்ணுக்குப் புலனாகும்.

நமது கண், காது, மூக்கு முதலிய இயந்திரியங்கள் ஓரளவுக்குத் தான் பொருள்களை உணர்த்தும். இக்கண்ணால் காண முடியாத எவ்வளவோ விஷயங்கள் இருக்கின்றன. அவை அக கண்ணால்தான் காணமுடியும். அஞ்ஞானம் நீங்க விளக்கு ஒளி போன்ற ஞானம் அவசியம். இந்த ஞானத்தை நாம் எவ்வளவு தான் முயன்றாலும் அவள் அருள் பெறாமல் அடைய முடியாது.

தீபத்தைப் பொதுவாக லக்ஷ்மி என்பார்கள். அவள்தானே 18 கைகளுடன் அஷ்டதசபுஜ துர்க்கையாகவும் விளங்குகிறாள்.

இந்த அம்பிகையே ஆத்மா. உள்ளத்தில் விளக்கொளி போல இந்த ஆத்மா விளங்குகிறது. இவள் சத் சித் ஆனந்தம் இவைகளின் பிரவாகமே உள்ளேயும் வெளியேயும் பிரவேசித்து தான் ஒருவளாகவே விளங்குகிறாள். எது இருக்கிறதோ அது "சத்" எது பிரகாசிக்கிறதோ அதுவே "சித்" எது பிரியமானதோ அது "ஆனந்தம்" இம்மூன்றும் சேர்ந்த சச்சிதானந்த ரூபிணி அவள்.

குண்டலினி யோகத்தில் ஈடுபட்ட யோகிகளுக்கு இந்த தீப துர்க்கை அவர்கள் ஹிருதயத்திலுள்ள அஞ்ஞானத்தை போக்கி ஞான ஒளி வீசச் செய்கிறாள்.

9. ஆஸுரி துர்க்கை

ஒரு பொருளைப்பார்த்து ஆசைப்படுவது மனிதனிடமுள்ள பலவீனம். அப்பொருள் கிடைத்தால் கிடைக்காத மற்றொரு பொருள் மீது ஆசை ஏற்படும். "எத்தனை லோகங்களைக் கட்டி ஆண்டாலும் ஆசைக்கோர் அளவில்லை" என்று இதைத்தான் சொல்கிறார்கள் ஆசைப்பட்டது கிடைக்கவில்லை என்றால் ஏமாற்றம், கோபம், தாபம் இவை எல்லாம் ஏற்படுகிறது.

இந்த ஆசை மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என்று மூன்று வகை. மண், பொன் இரண்டையும் ஒன்றாக கருதுவதும் முக்கியமாக இரண்டுவித ஆசைகள் தான். பெண்ணாசையாலே கெட்டவன் ராவணன், மண்ணாசையால் கெட்டவன் துரியோதனன் இந்த இரண்டு இதிகாசங்களும் சாகாவரம் பெற்று நம்மை எச்சரித்துக் கொண்டிருக்கின்றன.

தேவர்களும், அசுரர்களும் பாற்கடலைக் கடைந்து அமிருதம் கடைந்தெடுத்தார்கள். விஷ்ணு அழகே உருவான மோகினி ரூபம் எடுத்து தேவர்களுக்கு அமிர்தம் வழங்கி அசுரர்களுக்கு இல்லாது செய்து விட்டார். அசுரர்களுக்கு அமிர்தம் கிடைக்காமல் போவானேன்? மோகினியின் அழகில் மயங்கி அவள் தங்களுக்கு அமிர்தம் வழங்காமல் பட்சபாதம் செய்கிறாள் என்பதையும் அவர்கள் உணராமல் இருந்ததே காரணம்.

கள் உண்டால் போதை ஏற்படுவது போல மோகமும் ஒரு போதை. "மோகாந்தகாரம் என்னும் கடலில் மூழ்கி என்னாளும் மோசம் போனேன்" என்ற பல பக்தர்கள் பாடியிருக்கிறார்கள். இந்த மோகப் பிசாசியிடம் தப்பிக்க அம்பிகையின் அருள் தேவை. இந்த அருளைப் பெற்றதால் தான் ஆழ்வாராதிகள் தங்களை நாயகிகளாக நினைத்து புருஷோத்தமனான அந்த நாயகனைக் காதலித்து மோக்ஷம் பெற்றிருக் கிறார்கள். இந்த அருளைச் செய்பவள்தான் ஆஸுரி துர்க்கை.

மூகாம்பிகை

இந்த நவ துர்க்கைகளும் ஒன்றாக இணைந்தவள் மூகாம்பிகை. இவள் கோவில் கொண்டிருக்கும் கொல்லூர் (கோலபுரம்) ஆதி சங்கரருடன் தொடர்பு கொண்டுள்ள க்ஷேத்திரம். ஆதிசங்கரர் இந்த க்ஷேத்திரத்தில் மஹா ஸாரஸ்வத ஷோடசியை உபாசித்து ஜயித்து ஸ்ரீசக்ரத்தில் பூஜித்து அம்பிகையின் அருளால் ஸர்வக்ஞ பீடாரோஹணம் செய்து துர்மதங்களைக் கண்டித்து இப்புண்ணிய பாரதத்தில் அகண்டாத்வைதத்தை பரப்பி உலகுக்கு மோக்ஷ வழிகாட்டிய பெருமை இந்த மூகாம்பிகையின் அருளினால் தான்.

இத்தலம் பெருமை பற்றி ஸ்காந்த புராணத்தில் மூன்று அத்யாயங்களில் வருணிக்கப்பட்டுள்ளது. கம்ஹாசுரன் என்பவனை தேவி பைரவியாக அவதரித்து சம்ஹரித்த ஸ்தலம். இவள் அசுரனை ஊமையாக்கியதால் மூகாம்பிகை எனப் பெயர் பெற்றாள். சாக்தர்களுக்கு சித்தி அளிக்கும் க்ஷேத்திரம் என்கிறது வித்யாரண்ய சங்கர விஜயம்.

கர்நாடகா மாநிலத்தில் பிரசித்தி பெற்ற க்ஷேத்திரங்களில் இது ஒன்று. இத்தலத்தை அவிமுக்த பீடம், அர்த்தநாரீ பீடம் என்று கூறுகிறார்கள். இங்கு லிங்கமே தான் அம்பிகை. அம்பிகை ரூபம் ஒரு கவசமே. லிங்கத்தின் மத்தியில் ஒரு தங்க ரேகை காணப்படுகிறது. ஆண் பெண் ஒன்று சேர்ந்த அர்த்தநாரீ தத்துவம்.

கோலர், காச்யபர், பரசுராமர் முதலிய ரிஷிகளும் சுரதன், பிரத்யுமனன் முதலிய மன்னர்களும் அருள் பெற்ற இடம். கோலர் என்ற மகரிஷியின் பெயரால் ஏற்பட்ட கோலர் ஊர் கொல்லூராக மாறிவிட்டது.

மூகாம்பிகை சக்கிரத்தில் 81 முக்கோணம் உள்ளன. ஒன்பது துர்க்கைகளுக்கும் ஆளுக்கு ஒன்பது முக்கோணம் வீதம் 81 கணக்கு ஏற்பட்டிருக்கலாம் எனத் தெரிகிறது.

மூகாம்பிகையை தரிசிக்க வருவோர் முதல் நாள் க்ஷேத்ரோபவாசம் என்ற விரதம் அனுஷ்டிப்பது வழக்கம். மறுநாள் சங்கல்பம் ஆனதும் சௌபர்ணி நதியில் ஸ்நானம் செய்வார்கள். பிறகு தட்டில் தேங்காய், பழம், எடுத்துக்கொண்டு அதைவிட்டுக் கண்ணை எடுக்காமல் நேராக அம்பிகையை தரிசிக்கப் போவார்கள்.

கோவில் வாசலில் பிரும்மாண்டமான சிலை ஒன்று இருக்கிறது. தேவியை தரிசிப்பதற்கு முன் இந்த வீரபத்ரர் சிலையைப் பார்க்கக் கூடாது என்கிறார்கள். அப்படிப் பார்த்தால் அவர்கள் மனோரதம் ஈடேறாதாம்.

